KAYALPATTINAM MUNICIPALITY

FORM 3

Minutes of the Meeting held on 30.04.2010

<table>
<tr><td>Date of the Council Meeting</td><td>Decision Number</td><td>Subject of the Agenda</td><td>Decision of the Council</td></tr>
<tr><td>30.04.2010</td><td>696</td><td>பொருள் எண்: 1<br>காயல்பட்டிணம் மூன்றாம்நிலை நகராட்சியில் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் 2009-ம் மாதத்தில் கீழ்க்கண்டுள்ள பிறப்பு, இறப்புகளை பதிவு செய்து மன்றம் அங்கீகாரத்திற்கு.<br><br>
<table>
<tr><th colspan="4">மார்ச் - 2010</th></tr>
<tr><th colspan="2">பிறப்பு</th><th colspan="2">இறப்பு</th></tr>
<tr><td>ஆண்</td><td>27</td><td>ஆண்</td><td>10</td></tr>
<tr><td>பெண்</td><td>22</td><td>பெண்</td><td>7</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>49</td><td>மொத்தம்</td><td>17</td></tr>
</table>
செயல் அலுவலர் குறிப்பு:-<br>பிறப்பு, இறப்புகளை பதிவு செய்ததை பார்வையிட்டு மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 697 | **பொருள் எண்: 2**<br>காயல்பட்டிணம் நகராட்சி 9-வது வார்டு மரைக்கார்பள்ளித் தெருவில் பழைய இணைப்புகள் உள்ள பகுதியில் கிட்டத்தட்ட 9 அடி கீழே இருப்பதன் காரணத்தினால் பழுதுகள் ஏதும் ஏற்படின் அதனை சரி செய்திட மிகவும் சிரமமாக உள்ள காரணத்தினால் அதனை புதிதாக அமைத்து தருமாறும் மேலும் ரெட்ஸ்டார் சங்கத்தின் அருகில் உள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியின் சுற்றுச்சுவர் மிகவும் தாழ்வாக இருப்பாதால் சுவரை உயர்த்தி முள்வேலி அமைத்து தறுமாறும் சுவரின் கேட்டை உயர்த்திதருமாறும் கேட்டுக் கொண்ட 9-வது வார்டு உறுப்பினர் திருமதி.ஜெய்னம்பு அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>இரண்டாம் குடிநீர்திட்டப்பணியில் அனைத்து பிரதான குடிநீர் குழாய்களையும் மாற்ற வகை செய்யப்பட்டுள்ளது ஆகவே மற்றப்பணிகள் செய்ய அங்கீகரிக்கலாம். | இரண்டாம் குடிநீர் திட்டப்பணியில் அனைத்து பிரதான குழாய்கள் மாற்ற வகை செய்யப்பட்டுளளது. ரெட்ஸ்டா்ா OHT சுற்று சுவர் உயர்த்திட அங்கீகரிக்கப்பட்டது |
| | 698 | **பொருள் எண்: 3**<br>காயல்பட்டிணம் நகராட்சி 18-வது வார்டு கேமான்புதூர் அருகில் வடக்கு கோமான் புதூர் அமைந்துள்ளது. அங்கு வசிக்கும் பொதுமக்கள் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு இல்லாமலும், பொதுக் குடிநீர் விநியோகக் குழாய் ஏதும் இல்லாமலும் குடிநீருக்காக மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே பொதுமக்களின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பொது குடிநீர் குழாய் ஒன்று உடனடியாக அமைத்து தருமாறு கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.S..காசிராஜன் அவர்கள் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 699 | **பொருள் எண்: 4**<br>காயல்பட்டிணம் நகராட்சி 18-வது வார்டு சேதுராஜா தெரு பின்புறம் அமைந்திருக்கும் குளத்தார் உமர் முடுக்கு தெருவில் பொதுமக்கள் நடமாடமுடியாத வகையில் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கி சிரமமாக உள்ளது எனவே மேற்படி தெருவில் புதிதாக 3அடி உயர்த்தி சிமெண்ட் சாலை உடனடியாக அமைத்து தருமாறு கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.S.காசிராஜன் அவர்கள் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **செயல் அலுவலர் குறிப்பு:-**<br>தலைவர் உறுப்பினர் ஸ்தலப்பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம | |
| | 700 | **பொருள் எண்: 5**<br>காயல்பட்டிணம் நகராட்சி 18-வது வார்டு சேதுராஜா தெருவில் உள்ள முத்தாரம்மன் கோவில் அருகில் அமைந்திருக்கும் நகராட்சிக்கு உட்பட்ட கிணறு அபாய நிலையில் உள்ளதால் அதன் அருகில் 20 அடி ஆழமும், 8 அடி அகலமும் கொண்ட கிணற்றை சுற்றி தோவாளமும், 3 அடி மறைப்பு சுவறும் போர்கால அடிப்படையில் அவசரத்தையும் அவசியத்தையும் முன்னிட்டு பொதுநிதியிலிருந்து உடனடியாக அமைத்து தருமாறு கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.S.காசிராஜன் அவர்கள் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>தலைவர் உறுப்பினர் ஸ்தலப்பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 701 | **பொருள் எண்: 6**<br>காயல்பட்டிணம் நகராட்சி 18-வது வார்டுக்குட்பட்ட சேதுராஜா தெருவின் மத்தியில் அமைந்துள்ள வாலிபர் சங்கம் அருகில் அமைந்துள்ள மின்கம்பத்தில் ஒரு வெள்ளை நிற சோடியம் விளக்கு 2 எண்ணம் பொருத்தி தரும்படி கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.S.காசிராஜன் அவர்கள் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>தலைவர் உறுப்பினர் ஸ்தலப்பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 702 | **பொருள் எண்: 7**<br>காயல்பட்டிணம் நகராட்சியில் 2010-2011 குடிநீர் கட்டணம் வசூல் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. குடிநீர் மூன்று மாத கட்டணம் ஒன்றாக மாதம் ரூ.50 வீதம் மூன்று | அபராத கட்டணமாக ஒவ்வொரு குறிப்பிட்ட பகுதி |

| | | | |
|---|---|---|---|
| | | மாதத்திற்கு ரூபாய் 150 வீதம் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறாக 4 பகுதியாக ரூபாய் 150, 300, 450, 600 என கணினியில் வசூல் செய்ய சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் வழங்கப்பட்ட மென்பொருள் கணினியில் நிறுவப்பட்டு வசூலிக்கப்படுகிறது. இது தவிர்த்து கணினியில் மாதம் மாதம் குடிநீர் கட்டணம் வசூல் செய்ய இயலாது.<br>நான்கு பகுதியாக நிர்ணயிக்கப்பட்ட தொகையை அந்தந்த குறிப்பிட்ட பகுதி காலத்திற்குள் செலுத்த தவறும்படட்சத்தல் அபராதம் தொகை வசூலிக்கலாம். 4 பகுதியாக ரூபாய் 150, 300, 450, 600 குடிநீர் கட்டணம் வசூல் செய்வதுபோல், அந்தந்த குறிப்பிட்ட பகுதி காலத்திற்குள் செலுத்தாதவர்களுக்கு அபராதமாக ரூபாய் 5, 10, 15 20 என வசூல் செய்யுமாறும் மேலும் 2009-2010 வரை மாதம் மாதம் குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்பட்ட வந்தது. அப்போது மாதம் குடிநீர் கட்டணம் செலுத்த தவறும்பட்சத்தில் மாதத்திற்கு ரூ.5 வீதம் அபராதம் வசூல் செய்ய காயல்பட்டிணம் நகராட்சி குடிநீர் துணைவிதியில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் 2010-2011 குடிநீர் கட்டணம் வசூல் கணினி மயமாக்கப்பட்டு மூன்று மாதம் கட்டணம் ஒன்றாக மாதம் ரூ.150, 300, 450, 600 மட்டுமே கணினியில் வசூல் செய்வதால் அபராதமாகவும் அந்தந்த குறிப்பிட்ட பகுதி காலத்திற்கள் செலுத்தாதவர்களுக்கு அபராதமாகவும் ரூபாய் 5, 10, 15, 20 என வசூல் செய்ய காயல்பட்டிணம் நகராட்சி குடிநீர் துணை விதியை மாற்றம் செய்யுமாறும் கேட்டுக் கொண்ட நகர்மன்றத் துணைத்தலைவர் திரு.M.A.கசாலி மரைக்கார் அவர்கள் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>நகர்மன்றம் பரிசீலனை செய்யலாம். | குடிநீா் கட்டணம் செலுத்தாதவா ரூ.5,10,15,20 என அபராதம் வசூல் செய்ய நகராட்சி குடிநீா் துணை விதியை மாற்றியமைக்க அங்கீகரிக்கப்பட்டது |
| | 703 | **பொருள் எண்: 8**<br>காயல்பட்டிணம் நகராட்சி பகுதி 1-வது வார்டு அருணாச்சலபுரம் மயான சாலை அருகில் பேரூராட்சி காலத்தில் அமைக்கப்பட்ட கிணறு பாழடைந்துவிட்டதால். பொதுமக்கள் தண்ணீர் தட்டுப்பாட்டால் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அருணாசலபுரம் மயான சாலை செல்லும் பாதை அருகில் உள்ள காலனி வீட்டுப்பக்கம் பொது கிணறு ஒன்று பொது நிதியிலிருந்து அமைத்து தருமாறு கேட்டுக் கொண்ட 1-வது வார்டு உறுப்பினர் திரு த.திருத்துவராஜ் அவர்கள் கடிதம் | அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>செயல் அலுவலர் குறிப்பு:-<br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>704</td><td>பொருள் எண்: 9<br><br>நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரின் ந.க.எண்748/2008/கு.வ.2 நாள்:-21.09.2009-ன் படி குடிநீா் இணைப்பு கட்டண மதிப்பீட்டு தொகை(சென்டேஜ் கட்டணம்) மாற்றம் செய்து உத்தரவிடப்படுள்ளது. அதன்படி மாற்றி அமைக்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்<br><br>செயல் அலுவலர் குறிப்பு:-<br>நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி குடிநீர் இணைப்பு மதிப்பீட்டுத் தொகையில் (சென்டேஜ் கட்டணம்) சாலை சீரமைப்புக் கட்டணம் கீழ்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம்</th><th>கருங்கல் சல்லி சாலை ரு.</th><th>தார் சாலை ரு.</th><th>சிமெண்ட் சாலை ரு.</th></tr>
<tr><td>1.</td><td>0 - 30 மீட்டர் நீளத்திற்கு</td><td>1050</td><td>2250</td><td>2600</td></tr>
<tr><td>2.</td><td>30 - 90 மீட்டர் நீளத்திற்கு</td><td>1650</td><td>2850</td><td>3200</td></tr>
</table>
</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>705</td>
<td>பொருள் எண்: 10<br>திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 2008-2009-ம் ஆண்டு மேம்பாட்டு வளர்ச்சி நிதியின் கீழ் வரப்பெற்றுள்ள 100 எண்ணம் CFL விளக்குகளை காயல்பட்டணம் பகுதி அழகாபுரி மெயின் ரோட்டிலிருந்து, புதிய பேருந்து நிலையம், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, தபால் நிலையம், அல்ஜாமிவுல் அஸ்ஹர் மசூதி, கே.டி.எம். தெரு, தாயிம் பள்ளி, சின்ன நெசவுத் தெரு, திருச்செந்தூர் ரோடு, ஓடக்கரை வரை உள்ளதும் மற்றும் அல்ஜாமிவுல் அஸ்ஹர் மசூதி முதல் கடற்கரை வரை ஸி.கஸ்டம்ஸ் ரோட்டில் உள்ள மின்கம்பிகளின் உள்ள அனைத்து குழல் விளக்குகளுக்கு பதிலாக CFL விளக்குகளை பொருத்த மின்வாரியத்தை கேட்டுக் கொள்ள வேண்டியும் இதனை மாற்றம் செய்வதற்காக ஏற்பாடும் மதிப்பீட்டுத் தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து செய்திட கேட்டுக் கொண்ட நகர்மன்ற துணைத் தலைவர் M.A.கசாலி மரைக்கார் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>செயல் அலுவலர் குறிப்பு:-<br>பார்யிட்டு மன்றம் தீர்மானிக்கலாம்</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>706</td>
<td>பொருள் எண்: 11<br>காயல்பட்டணம் நகராட்சியில பொது நிதி பணிகள் 2010-11-ன் கீழ் வடக்கு முத்தாரம்மன் கோவில் தெருவில் சாலையில் சிறிய பாலம் கட்டும் வேலைக்கு 23.04.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளது.
<table>
<tr><td>வ. எண்</td><td>புணியின் பெயர்</td><td>மதிப்பீடு (இலட்சத்தில்)</td><td>ஓப்பந்தகாரர் பெயர் / முகவரி</td><td>ஓப்பந்தவகை (மதிப்பீடு ரேட்டுக்கு)</td></tr>
<tr><td>1</td><td>நகராட்சி பகுதி வடக்கு முத்தாரம்மன் கோவில் தெருவில் சாலையில் சிறிய பாலம் கட்டுதல்</td><td>1.00</td><td>திரு.S.குமரேசன்<br>திருச்ந்தெூர்<br><br>திருமதி.F.முனவ்வாரா<br>காயல்பட்டணம்</td><td>0.02%<br>குறைவு<br><br>0.19%<br>கூடுதல்</td></tr>
</table>
வரப்பெற்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் திரு.S.குமரேசன், திருச்செந்தூர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 0.02% குறைவாக கோரியிருப்பதால் அவரது ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அனுமதித்து அங்கீகரிக்க.<br>செயல் அலுவலர் குறிப்பு:-<br>குறைந்த ரேட் கோரியுள்ள ஒப்பந்தபுள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 707 | **பொருள் எண்: 12**<br>நகராட்சிப்பகுதியாகிய கஸ்டம்ஸ் சாலை முதல் அண்ணா நகர் செல்லும் மண் சாலையை தார்சாலையாக அமைக்கவும் அதில் மழைநீர் சென்று கடலில் கலக்கும் வகையில் பாலம் அமைக்கவும் நகராட்சி பொறியாளரால மதிப்பீடு ரூ. 6.50 இலட்சத்தீற்கு தயாரிக்கப்பட்டு அற்கு நகர்மன்ற அனுமதியும் (தீர்மானம் எண்:- 400 நாள்:- 29.08.208) பெறப்பட்டு, அதில் குறைந்த ரேட் கோரிய திருமதி.F.முனவ்வரா காயல்பட்டணம் என்பவருக்கு 01.07.2009 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. தற்பொழுது காயல்பட்டணம் நகர மக்களின் சார்பாக காயல்பட்டணம் ஐக்கிய பேரவை முக்கிய நிர்வாகிகள், அந்த சாலை அமைக்கப்பட்டால் கற்புடையாளர்பள்ளி வட்டம் பகுதியிலிருந்து செல்லும் அனைத்து மீன் வண்டி வாகனங்களும் இந்த சாலை வழியாக செல்லும் எனவும் அதனால் துர்நாற்றம் வீசும் எனவும் அதனால் இயற்கையில் அழகாகா அமைந்துள்ள காயல்பட்டணம் கடற்கரை பீச்சில் சுகாதாரக்கேடு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. என புகார் தெரிவிக்கப்பட்டது மற்றும் அந்தப்பகுதி சம்மந்தப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின்படியும் அந்தப் பணியினை ரத்து செய்ய மன்ற அனுமதிக்கு.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>கடற்கரையில் சுகாதாரக்கேடு ஏற்படுவதை தடுக்க அப்பணியை ரத்து செய்து மன்றம் அங்கீகரிக்கலாம். | வேலை உத்திரவை ரத்து செய்திட அங்கீகரிக்கப்பட்டது |
| | 708 | **பொருள் எண்: 13**<br>நகராட்சிப் பகுதியாகிய கீழநெயினார் தெருவின் கிழக்கு தெருவில் தார்ச்சாலை அமைக்க நகராட்சி பொறியளார் மற்றும் பணிமேற்பார்வையாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 6.80 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி மேற்பார்வையாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை மன்றம் அங்கீகரிக்கலாம். இப்பணி அரசு நிதி பெற்று முன்னுரிமையின் அடிப்படையில் பணி செய்யலாம். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 709 | **பொருள் எண்:14**<br>நகராட்சிப் பகுதியாகிய கி.மு. கச்சேரி தெரு சிமெண்ட சாலை மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக இருப்பதாலும் பொதுமக்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது, இதனால் அதனை சீரமைத்து தரவும், ஏற்கனவே உள்ள உயரத்திற்கு மிகாமல் பழைய சாலையின் உயரத்திற்கு அமைத்து தர வேண்டும் என கேட்டுக் கொண்ட நகர்மன்ற தலைவர் வாவு சா.செய்யிது அப்தூர் ரஹ்மான் அவர்களின் கோரிக்கையின்படி நகராட்சி பொறியாளர், நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.55 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி மேற்பார்வையாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை மன்றம் அங்கீகரிக்கலாம். இப்பணி அரசு நிதி பெற்று முன்னுரிமையின் அடிப்படையில் பணி செய்யலாம | அங்கீகரிக்கப்பட்டது |
| | 710 | **பொருள் எண்:-15**<br>காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சியின் மார்ச் - 2010-ம் மாத செலவு சீட்டு எண் 374 முதல் 407 முடிய செலவினங்களை மன்றம் அங்கீகரிக்க.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>செலவினங்களை மன்றம் அங்கீகரிக்லாம். | அங்கீகரிக்கப்பட்டது |

| | 711 | **பொருள் எண் - 16**<br>காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சி மக்கள் தொகை கணெக்கெடுப்பு 2011 பணிக்காக மக்கள் தொகை கணெக்கெடுப்பு ஆணையாளா் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவா் நேரடி அறிவுரையின்பேரில் நகராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் அவசர அவசியத்தை முன்னிட்டு கதவு எண்கள் போடும் பணி வாா்டு எண் 1 முதல் 18 வரை உள்ள வாா்டுகளை நான்காக பிரித்து விலைபுள்ளி பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளியான ரூ. 7.80-க்கு விலைப்புள்ளிதாரா்கள் அனைவரும் சம்மதித்து நகராட்சிக்கு கடிதம் சமா்ப்பித்துள்ாதை நகா்மன்றத்தலைவரால் முன் அனுமதி வழுங்கப்பட்டது முன் அனுமதி வழுங்கியது மன்றத்தின் அனுமதிக்கு. | அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|---|

| வாா்டு எண்கள் | பெயா்மற்றும் முகவரி | விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 முதல் 5 வரை | நாராயணன், தென்திருப்பேரை | 7.80 |
| | சந்தனக்குமாா் , பூந்தோட்டம் | 9.50 |
| | ஈஸ்வரன் திருச்செந்தூா் | 10.00 |
| 6 முதல் 10 வரை | நாராயணன், தென்திருப்பேரை | 11.00 |
| | சந்தனக்குமாா் பூந்தோட்டம் | 8.50 |
| | ஈஸ்வரன், திருச்செந்தூா் | 10.00 |
| 11 முதல் 14 வரை | நாராயணன், தென்திருப்பேரை | 11.00 |
| | சந்தனக்குமாா் பூந்தோட்டம் | 9.20 |
| | ஈஸ்வரன , திருச்செந்தூா் | 8.30 |
| 15 முதல் 18 வரை | நாராயணன், தென்திருப்பேரை | 11.00 |
| | சந்தனக்குமாா் பூந்தோட்டம் | 9.00 |
| | ஈஸ்வரன் திருச்செந்தூா் | 8.00 |

**செயல் அலுவலா் குறிப்பு:-**

மக்கள் தொகை கணெக்கெடுப்பு பணி 2011 அவசர அவசியத்தை கருதி முன் அனுமதி வழுங்கிய குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்